# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௨ம். புத்தகம், சஞ்சிகை ௯.] ௲௮௱௫௰௨ம் ௵ வைகாசி மீ". ௰௩ உ. வியாழக்கிழமை.—Thursday, May 13, 1852. [Vol. XII. No. 9.

TERMS OF THE PAPER.

A single copy 2 shillings a year. Mail subscribers, free of postage, 4 shillings—TO BE PAID IN ADVANCE. If payment is delayed beyond the first quarter, 6 pence extra; if beyond the second, or July 1st, 1 shilling. To Native Agents, who will send ADVANCE PAY for 5 copies, we will send the 6th gratis, and at this rate for any number of copies.

Advertisements inserted for 3 shillings a square; less than a square 2 shillings. At this rate each will appear twice, *if the advertiser so requests.*

*All notices of deaths and marriages will be chargeable as advertisements.*

Communications must be *post paid* to receive attention.

The following persons will act as Agents for the Star.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO, CATTAVELY, } Mr. J. White.
TRINCOMALIE—Rev. E. J. Robinson.
COLOMBO—Messrs. P. B. Fernando & Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.

[Death of an aged Christian.]

## ஒரு விருத்தாப்பிய கிறிஸ்தவனுடைய நன் மரணம்.

ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து இப்பொழுது அநேக சனங்கள் அன்னிய தேசத்தாருக்கு அடிமைகளாக விற்கப்படுகிறதுபோல சய. வருஷத்துக்கு முன்னே விற்கப்பட்ட அனேக அடிமைகள் ஜெமேக்கா தீவிலே வைக்கப்பட்டிருந்தார்கள். கொடுமையான அந்த வியாபாரம் அந்தத் தீவில் நிறுத்தப்பட்டதுமல்லாமல், அவ்விடத்திலுள்ள அடிமைகள் விடுதலையாக்கப்பட்டார்கள். அவர்களில், அனேகர் மனித அடிமைத்தனத்தினின்று மாத்திரமல்ல, தேவகிருபையினாலே பசாசு பாவம் என்பவற்றின் அடிமைத்தனத்தினின்றும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் யாக்கோபு என்று ஒரு விருத்தாப்பியன் சில நாளுக்கு முன்னே வியாதிப்பட்டு மரணமடைய ஏதுவாயிருக்கையில் தன் போதகரோடே செய்த சம்பாஷணையை இவ்விடத்தில் காட்டுகிறோம். ஒருநாள் போதகர் அவனைப் பார்க்கப்போயிருக்கையில் அவனை நோக்கி,

யாக்கோபு, உனக்குச் [illegible]னசவுக்கியம் உண்டாயிருக்கிறதா என்று கேட்டார்.

அவன் ஆச்சரியத்தோடே ஐயா, நீர் ஏன் அப்படிக் கேட்டீர் என்று சொல்ல,

போதகர் இப்பொழுது உன் சரீரத்தில் மிகுந்த வருத்தம் உண்டாயிருக்கிறதே. உனக்குள்ளே மனப்பாக்கியம் உண்டாயிருக்கிறதோ இல்லையோ என்பதை அறியும்படிக்கு அப்படிக் கேட்டேனென்றார்.

அவன் ஐயா, எனக்குப் பாக்கியத்தில் குறைவென்ன? நான் இன்னாரை விசுவாசித்திருக்கிறேனென்று அறிந்திருக்கிறதினாலும் அவரிடத்தில் அன்புகூருகிறதினாலும் எனக்குப் பாக்கியமுண்டு. என் அருமை இரட்சகர் எனக்கு எதைக் கற்பித்தாலும் எதை நேரிடச்செய்தாலும் நான் அவருடைய சித்தத்துக்குக் கீழடங்கிப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளுகிறேனென்றான்.

போதகர், உனக்கு உண்டாயிருக்கிற நோவையும் வருத்தத்தையும் எதினாலே அத்தனை பொறுமையோடே சகித்துக்கொள்ளுகிறாயென்று கேட்டதற்கு,

நான் சுகமாயிருக்கையில் அந்த அருமை இரட்சகரைத் தேடிக்கண்டதினாலே இப்பொழுது கஸ்தியடைகிற என்னை அவர் கைவிடவில்லை. ஆ! நான் சுகமாயிருந்தகாலத்தில் அவருடையதயவைத் தேடிக்கொள்ளாதிருந்தால் இப்பொழுது என்னசெய்வேன். இப்பொழுது தேடுகிறதற்கு எனக்குப் பெலன் இல்லையே. என் சரீரம் மிகவும் பெலவீனமாய் இருக்கிறதுபோல என் மனசும் பெலவீனமாயிருக்கிறது. எந்தக் காரியத்தின் மேலும் என்னுடைய நினைவு நோக்கம் விருப்பம் இவைகளைச் சற்றுநேரமாகிலும் உறுதியாய் வைத்துக்கொள்ளுகிறது மிகவும் வருத்தம். ஆ! என்னுடைய இரட்சகர் எனக்காக மரித்தாரே. என்னை இரட்சிக்க அவர் சித்தம் உள்ளவராயும் இருக்கிறாரென்று அறிந்திருக்கிறதால் இந்த உபத்திரவத்தில் பொறுமையடைந்திருக்கிறேனென்றான்.

போதகர், உனக்கு இரட்சிப்பு உண்டாக்குவதற்கு ஏதுவான யாதொரு நன்மையை உனக்குள்ளேகாண்கிறாயா என்றதற்கு,

அவன், எனக்குள்ளே நன்மை ஏது? ஒன்றும் இல்லையே. என்புண்ணியத்தினிமித்தம் பராபரன் என்னை இரட்சியாமல் இரட்சகரிடத்தில் வைக்கும்விசுவாசத்தின் மூலமாய் என்னை இரட்சிப்பார். அவருடைய கிருபையினாலே என்னை இரட்சிக்கக் கெஞ்சுகிறேன். நான் நாள்தோறும் அவருக்கு விரோதமாய் நடக்கிற பாவிதான். எந்தப் பாவத்தினின்றும் அவர் என்னை இரட்சிக்க வேண்டுமென்று மன்றாடுகிறேன். அப்படியே அவர் என்னைப் பாவத்தினின்று விடுதலையாக்கி எனக்கு மன்னிப்புத் தருவாரென்று அறிந்திருக்கிறேனென்றான்.

போதகர், பராபரன் உன் பாவத்தை மன்னிப்பாரென்று உனக்கு எப்படித்தெரியும் என்றதற்கு,

அவன், இயேசுநாதர் இவ்வுலகத்தில்வந்து பாவிகளுக்காக மரித்தாரே. அவர் சிந்தின இரத்தம், எவ்வகையான பாவங்களையும் நீக்கிச் சுத்திக்கரிக்குமென்றும் அவரிடத்தில் சேருகிறவர்களை அவர் புறம்பே தள்ளமாட்டாரென்றும் உமக்குத் தெரியுமே. ஆகையால் என்னையும் அவர் தள்ளி விடாமல் சேர்த்துக்கொள்ளுவாரென்று உறுதியாய் நம்பியிருக்கிறேனென்றான்.

போதகர், மரணமடைய உனக்குப் பயம் இல்லையா என்று கேட்டதற்கு,

அவன், சிலவேளைகளில் நான் குணப்பட்டவனல்லவென்றும் இரட்சகரைப்பற்றிய என் விசுவாசம் நிலைவரமுள்ளதல்லவென்றும் எனக்குள்ளே சமுசயங் கொள்ளும்படி பசாசானவன் தூண்டிவிடுகிறதினாலே மரணத்தைக் குறித்துப் பயமுண்டாகும். அப்பொழுது நான் பராபரனை நோக்கி வேண்டுதல்செய்ய இரட்சகர் என்பாரிசமாயிருந்துஎன்னைத் தேற்றுகிறதினாலே இரட்சிப்பைக்குறித்து நம்பிக்கையுள்ளவனாய்க் கலக்கமற்றிருக்கிறேனென்பதை உணர்ந்துகொள்ளுகிறேனென்றான்.

போதகர், சுபாவப்படி உன்னிருதயம் கபடமுங் கேடுமுள்ளதாயிருக்கிறதினாலே அதில் தோன்றுகிற உன் உணர்வுகளின்மேற் பற்றுதலாயிருக்கிறதுமிகவும் மோசமென்றதை அவன் கேட்டு,

ஐயா, நான் என் இருதயத்தின்மேல் நம்பிக்கை வைக்கவில்லை. பராபரன் கொடுக்கிற கிருபை எனக்குமுண்டென்று நம்பி ஆறுதல் அடைகிறேன். சாத்தான் அதைக்கண்டு என்னை விட்டு விலகிப்போகிறானென்றான்.

போதகர், இப்பொழுது நீ இறந்துபோகிறதற்கோ பிழைத்திருக்கிறதற்கோ எதில் விருப்பமுள்ளவனாயிருக்கிறாயென்று கேட்டதற்கு,

அவன், கத்தருடைய சித்தம் எப்படியோ அப்படியே ஆகக்கடவதென்றான்.

அதின்பின்பு போதகர் சில வேதவாக்கியங்களை அவனுக்கு வாசித்துக்காட்டிச் செபம்பண்ணிப் புறப்பட்டுப் போகையில், அந்த யாக்கோபு அவரைப்பார்த்து நன்யறிதலோடே உபசாரஞ் சொல்லி ஐயா எனக்காகச் செபம் பண்ணும், செபம்பண்ணுமென்று கேட்டுக்கொண்டான். அவன் சற்று நேரத்துக்குப் பின்பு அதிக பெலவீனம் அடைந்து சமாதானத்தோடே இறந்து போனான்.

சற்குணனை நோக்கி நேர்மையானவனைப் பார். அவன் முடிவு சமாதானமென்றும், கத்தருக்குட்பட்டுமரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்றுமிருக்கிற வேதவாக்கியங்களின்படியேயாயிற்று. கத்தருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

பிரியமானவர்களே, மேற்காட்டிய அந்த யாக்கோபினுடைய மரணசங்கதியினாலே அவனுடைய முடிவு சமாதானமும் பாக்கியமுமுள்ளதாயிருந்ததென்று அறிந்திருக்கிறீர்களே. நீங்களும் அவனைப்போல நல்ல மரணம் அடையும்படி வகை தேடுகிறீர்களா? பாருங்கள், காலஞ் சுருக்கமாய் இருக்கின்றது. நம்முடைய சீவன் எம்மாத்திரம்! அது சற்றுநேரந் தோன்றிப் பின்பு காணமற்போகிற புகையைப்போல இருக்கிறதே. எந்த மனிதனும் மாயை என்கிறது நிசம். மனிதனானவன் உலர்ந்துபோகிற புல்லுக்கு ஒப்பானவன். அவனுடைய மகிமை எல்லாம் உதிர்ந்துபோகிற பூவைப்போல இருக்கின்றது. அப்படியிருக்க, நீங்கள் அழிவுள்ள இவ்வுலகத்திலும் அதிலுள்ளவைகளிலும் நம்பிக்கைவையாமல், அழியாமலுங் குன்றாமலும் அசுத்தமில்லாமலும் இருக்கிற மேலான பரம நன்மைகளையே தேடிக்கொள்ளுங்கள். இரட்சண்ணிய கத்தராகிய இயேசுநாதர், வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள் யாவரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேனென்று இரக்கமாய் அழைக்கிறார். அவரே தம்மைச் சேருகிறவர்களை முற்றமுடிய இரட்சிக்கச் சித்தமும் திராணியுமுள்ளவராய் இருக்கிறார். இது சத்தியமென்று அறிந்த நீங்களும் சமாதானமும் பாக்கியமுமான முடிவு அடையும்படி இப்பொழுதே அந்த இரட்சகரை விசுவாசத்தோடே பற்றிக்கொள்வீர்களாக.

[Native Female Education.]

## பெண்களுங்கல்விகற்கவேண்டுமென்பது.

பெண்பிள்ளைகளுங் கல்வி கற்பது முக்கியமென்று இலங்கைத்தீவிற்கு முதன் நீதியதிபதியாயிருந்த சிறீ. றிச்சாட் ஒற்லியென்பவர் சொன்ன பிரமாணத்தைப் பிறகிட்ட சஞ்சிகையிற் காட்டினோம். அதைக்குறித்து நாங்கள் சிறிது கவனிப்புகளைப் பண்ணுகிறதற்காதாரமாய், அவர் அதைப்பற்றி எழுதின வேறொரு காரியத்தை எடுத்துச் சொல்லவேண்டியிருக்குது. அது என்னவெனில், பெண்பிள்ளைகளைப் படிப்பித்தால் அவர்களுக்கு முயற்சியும் இல்லொழுக்கமுறையும் பழக்கி அத்துடனே சன்மார்க்கநெறிக்கும் வேதப்பிரமாணமுறைக்கும் இசைந்த கல்வியைக் கற்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தவேண்டியது, என்பதே. எங்கள் தருமப் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தை நாங்கள் பராபரித்துவருகையில் அவர்களுக்கு இருக்கவேண்டியதாய் நாங்கள்விரும்புகிற சகல இலட்சணங்களும் ஒருமிக்க அவர்களிலே காண்கிறது கூடாதகாரியம். அல்லாமலும், அவரவர் நிருபாகத்துக்குத்தக்கதாய், முயற்சியும் இல்லொழுக்கமுறையும்எங்கள் விருப்பம்போல அவர்களுக்குப் போதிவிப்பது பிரயாசம். இளவயதிலே பிள்ளைகளை எடுத்து அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து விவாகம் முடிக்குமளவும் அவர்களைப் படிப்பித்து வந்ததினால் நிலைபேறான அனேகம் நன்மைகளுண்டாயின. முன்னே பிள்ளைகளைச் சேர்த்து வத்திராகாரங் கொடுத்துப் படிப்பிப்பது பெரிய பிரயாசமாயிருந்தும் இப்போவோ பெண்கள் கல்விகற்கப்படாதென்ற கட்டாயமான எண்ணங்கள் சனங்களிடத்தில் மாறிப்போயின. எவ்வளவுக்கென்றறிகில், பள்ளிக்கூடத்திற் சேருகிறதற்குத் தகுதியாய் இன்னின்னபடிப்புகளிற் தேறியிருக்கிறவர்கள் மாத்திரஞ் சேர்க்கப்படுவார்களென்று விளம்பரம் பண்ணப்பட்டிருந்தாலும், சேரும்படிக்கு வந்து அலட்டுப்பண்ணுகிறவர்களனேகராய் இருக்கிறார்கள். இப்பொழுது அந்தந்த இடங்களிலே பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், தருமப்பள்ளியிற் சேர்ந்து படிக்கவேண்டிய அவசரம் வரவரக் குறைந்துவருகின்றது.

இன்னும் எங்கள் மனதுக்குப் பூரண அத்தாட்சியாய் நாங்கள் கண்டறிகிற வேறொரு திருத்தமென்னவெனில், படித்தவர்களின் தொகை இப்பொழுது அதிகப்படுவதால் அவர்கள் தானே தங்கள் வீடுகளில் உவாத்திமாரை வைத்துத் தங்கள் புத்திரிகளைப் படிப்பிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிள்ளைகளை ஒரு தருமப்பள்ளியில் வைத்துச் செலவுகொடுத்துப் படிப்பிக்கிறதற்கு இயல்புள்ளவர்களாயிருக்கிறதினால், நாங்கள் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் யோசனை என்னவெனில், மூலபாடங்களை வீடுகளிற் படித்து மாதாமாரின் கீழிருந்து இல்வாழ்க்கைக்குரிய காரியங்களிற் படிந்தபிற்பாடு, அவர்களை எடுத்துப் பள்ளிக்குவைத்துத் தங்கள் தராதலத்துக்குத்தக்க காலத்துக்கிருந்து படிக்கவிடுவது நல்லயோசனை. இவ்விதமாய் இங்கிலாந்து அமெரிக்கா முதலான சீர்திருந்திய இடங்களிலுள்ள பெண்பிள்ளைகளைச் சாத்திரப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிச் சிலர் இரண்டு வருடமளவுக்கும், சிலர் ஆறு வருடமளவுக்கும் படிப்பிக்கப்பட்டுவருகிறார்கள். முயற்சியிலும் இல்லொழுக்க முறையிலும் பழகிக்கொள்ளும்படி பெண்பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமென்று மேற்சொல்லிய நீதியதிபதி சொல்லிக்கொடுத்த யோசனையும் புத்தியும் இதுவே. இவ்விதமாய்ச் செய்யக்கூடியதாயிருந்தால், பெண்சாதிமாருந் தாய்மாருந் தத்தமக்குரிய கடமைகளைச் செய்யவும் தங்கள் சொந்தப் பிள்ளைகளைப் படிப்பிக்கவும் அவர்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லிக்கொடுக்கவும் வருவதற்கிடமாயிருக்கும். ஏனென்றால், பிள்ளைகள் தருமப்பள்ளிக்குப் போகமுன் இல்லாச்சிரமத்துக்கடுத்த பணிவிடைகள் இன்னின்னவைத

மென்று கொஞ்சமாகுதல் கற்றிருந்தால் அவர்கள் பள்ளியில் இருக்கும்பொழுதும் அதையே பழகிவருவார்கள். அவர்கள் பள்ளியைவிட்டுத் தங்கள் பிதா வீட்டுக்குப் போகவந்தாலும் அல்லது விவாகம் முடித்து நாயகமாருடைய வீட்டுக்குப் போக வந்தாலும் இல்லாச்சிரமத்துக்கடுத்த பணிவிடைகளில் நன்றாய்த் தேறினவர்களாய் இருப்பார்கள். இதே நாங்கள் இவ்வருடத்திற் பண்ணின யோசனை. இது உத்தமமானால், வாய்க்குமென்பதற்கையமில்லை.

பெற்றாரும் மற்றுமுற்றாரும் பெண்பிள்ளைப்பள்ளிக்கூடத்தைப்பற்றிய எங்கள் கருத்துக்களைப் பூரணமாய் விளங்கிக்கொள்ளும்பொருட்டு ஒரு சற்குண ஸ்திரியின் தன்மையை எடுத்து இதன்பின்னாற் [illegible]கிறோம். அவளுடைய நடையை முன்மாதிரியாகக்கொண்டு அந்நடைக்கிணங்கத் தங்கள்பத்திரிகளைப் பயிற்றிப் படிப்பித்து வேலையாக்கிவைக்கவேண்டியது. இது நாங்கள் எங்கள் சொந்த உபாயத்தினால் உண்டுபண்ணிக் காட்டிய முன்மாதிரியாயிராமல், பரிசுத்தாவியின் வரப்பிரசாதமென்னும் எழுத்தாணியினால் எழுதப்பட்ட முன்மாதிரியாயிருக்கின்றது. அது உலகத்திலிருந்தவர்களுக்குள்ளே அதிக ஞானியாயிருந்த சாலோமோனெழுதின நீதிமொழி, கடைசி அதிகாரம், பத்தாம் வசனந்தொடங்கி முடியுமட்டுங் கண்டுகொள்ளலாம். அவை வருமாறு: சற்குணஸ்திரியைக் கண்டடைந்தவன் யாவன், அவள் பதுமராகத்திலும் விலையுயர்ந்தவள். அவளுடைய புருஷன் மனதார அவளை நம்புகிறான். அவனுக்குக் கொள்ளைவேண்டுவதில்லை. அவள் தன் ஆயுள்பரியந்தம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையேசெய்வாள். ஆட்டுமயிரையுஞ் சணலையுந் தேடித் தன் கையினால் உச்சாகத்துடன் வேலைசெய்கிறாள். வியாபாரியின் கப்பல்களைப்போல அவள் தூரத்தினின்று தனது ஆகாரத்தைக் கொண்டுவருவாள். அவள் இருட்டோடேயெழுந்து தன் குடும்பத்தாருக்கு ஆகாரத்தையும், தன் தாதிகளுக்கு வேலையையுங் கொடுப்பாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கையின் பலன்களினால் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்குவாள். தன்னிடையிலே பலத்தைக் கட்டித் தன் தோள்களைப் பலப்படுத்துகிறாள். தன் வியாபாரம் உத்தம பலன்தருகிறதென்பதும் அவளுக்குத்தெரியும். இராக்காலத்தில் அவள் விளக்கு அணைவதில்லை. தன் கைகளை இராட்டினத்திலே நீட்டுகிறாள், அவளுடைய கரங்கள் கதிரைப் பிடிக்கும். தரித்திரருக்குத் தன் கைகளை விரித்துத், திக்கற்றவர்களுக்குத் தன் கைகளை நீட்டுகிறாள். தன் குடும்பத்தாரெல்லாரும் இரட்டை வஸ்திரமுள்ளவர்களாதலால் தன் குடும்பத்தாரைக்குறித்து உறைந்த மழைக்குப் பயப்படாள். தனக்கு விஸ்திரமான மேலங்கியைச் செய்துகொள்ளுகிறாள். வெள்ளைப்பட்டும் இரத்தாம்பரமும் உடுப்பாள். அவள் புருஷன் தேசத்து முதியோருடன் நியாயவாசல்களிலிருக்கும்பொழுது மதிக்கப்படுவான். அவள் மெல்லிய புடைவைகளை உண்டாக்கிக் கிரயத்துக்குக் கொடுப்பாள். கச்சுக்களை வியாபாரிக்கு விலைப்படுத்துவாள். பெலமும் மகிமையுமே அவளுக்கு வஸ்திரம். வருங்காலத்திலும் சந்தோஷப்படுவாள். தன் வாயைத் திறந்து ஞானத்தை அறிவிப்பாள். தயையுள்ளகட்டளை அவள் நாவிலுண்டு. அவள் தன் குடும்பத்தின் நடக்கைகளை உற்றுப்பார்க்கிறாள். சோம்பேறியாகப் போஜனம்பண்ணாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளை வாழ்த்துவார்கள். அவள் புருஷனும் அவளை நோக்கி, அனேகங் கன்னியர் நன்மைசெய்ததுமேய், நீயோ எல்லாரிலுஞ் சிரேஷ்டமுள்ளவள் என்று அவளை வாழ்த்துவான். அழகு வஞ்சனையுள்ளது, சௌந்தரியம் வீண். யேகோவாவுக்குப் பயப்படுகிற இஸ்திரியோ வாழ்த்தப்படத்தக்கவள். அவள் கையின்பலனை அவளுக்குக்கொடு. அவளுடைய கிரியைகள் நியாயவாசல்களில் அவளைப் போற்றக்கடவன.

## உதயதாரகை.

௲அ௱௫௨ ௵. வைகாசி ௴. ௰௫ ௩. ௨.

[Death of Rev. Christian David.]

### கிறிஸ்தியான் தாவீதுஐயருடைய மரண சங்கதி.

இந்தமாதம் எட்டாந்தேதி காலமே ஐந்தரைமணிபோலக் கனம்பொருந்திய கிறிஸ்தியான்தாவீதுஐயர் எண்பதுவயதும் ஒன்பதுமாதமுமுள்ளவராய்ச் சீதாரியில் தமதுவீட்டிற் காலஞ்சென்று மற்றநாள் ஞாயிற்றுக்கிழமைகாலமே சுண்டிக்குழியில் சஞ்சுவாங்கோயிலில் அடக்கம்பண்ணப்பட்டார். அவர் நாற்பதுவருடக்காலமாய் அதிக முயற்சியுடனேயும், தைரியத்துடனேயும் யாழ்ப்பாணத்திலும், இலங்கைத்தீவில் அனேகபகுதிகளிலும் இந்துதேசத்தைச்சேர்ந்த பற்பல இடங்களிலும் போய்த் தன்னெல்லைக்குட்பட்ட சகலருக்கும் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரபலியம்பண்ணுகிறதிலேயும், நீதி, சமாதானம், அன்பென்னும் சுவிசேஷத்தைப் போதிக்கிறதிலேயுந் தன்னாட்களைப் போக்கிவந்தார்.

தாவீதுஐயர், ௲எ௱எ௧ ம் ஆண்டு ஆவணிமாதம், ஏழாந்தேதி தரங்கன்பாடியிற் பிறந்தார். தென்மார்க்குதேசத்திலிருந்தனுப்பப்பட்டுத் தரங்கன்பாடியிலிருந்த குருமாருடைய உபதேசத்தின்மூலமாய்க் கிறிஸ்துமார்க்கத்தை இவருடைய தகப்பன் மெய்யென்று ஏற்றுக்கொண்டு சிவசமயம் பொய்யென்று தள்ளிவிட்டார். இவர் எழுபத்தைந்தாமாண்டில் ஞானஸ்நானம்பெற்றுக் குருமாருடைய பராபரிப்பின்கீழிருந்து படித்து, எண்பத்தாறாமாண்டு முகவையாகத் தஞ்சாவூர், திருநெல்வேலிப்பகுதிகளிற் பல இடங்களுக்கு உபதேசியும் உபாத்தியுமானார். இதற்கெல்லாம் பிரதானமாய்ச் சுவாட்சையர் இவருக்குத் துணைசெய்துவந்தார். இவர் எண்பத்தொன்பதாமாண்டுவிவாகம்பண்ணினார். அவருடையமனைவி அதிகம் வயதுசென்றவளாயிருந்தும் இன்னும் உயிரோடிருக்கிறாள். இன்னும் இவர்களுக்கு ஆறு பிள்ளைகளும், இருபத்தெட்டுப் பேரப்பிள்ளைகளும், ஐந்து பீட்டப்பிள்ளைகளுமுண்டு.

௲அ௱௧ ம். ஆண்டு யாழ்ப்பாணத்திலே சிவிலுத்தியோகஸ்தனாயிருந்து காலஞ்சென்றுபோன ஒரு துரைக்குத் தமிழ்ப்படிப்பிக்க நிசமிக்கப்பட்டு இங்கிலீசுகாரர் இலங்கைத்தீவைப் பிடித்துக்கொண்டதின் பின்னும் கொஞ்சக்காலமாக அப்படிச்செய்துவந்தார். அதன் பிற்பாடு, முதன்முதல் இலங்கைத்தீவுக்கு மகாராசாவாய்வந்த கனம்பொருந்திய நோதுஎன்பவர் இவரை யாழ்ப்பாணத்திற் குருஉத்தியோகம் நடப்பிக்கவும் இவ்விடத்திலும் மன்னாரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அனேகம் பள்ளிக்கூடங்களைப் பராபரிக்கவும் நிசமித்துச் சுண்டிக்குழியிற் சஞ்சுவாங்கோவிலை அவருக்குக் கொடுத்துவிட்டார். அவர் அதிலே தமது குருப்பணிவிடைகளை நடத்திவந்தார்.

அல்லாமலும், ௲அ௱௨௪ ம். ஆண்டளவிற் கற்குத்தாவுக்குப்போய் அவ்விடத்திலிருந்த விசோப்கீபர் என்பவரால் குருவாக நிசமிக்கப்பட்டு அடுத்தவருடந் திரும்பி இலங்கைக்குவந்து, நாற்பத்தோராமாண்டளவும் முயற்சியுடனே தேவ ஊழியத்தை நடத்தி வந்தார். அதன்பிறகு அவருக்குப் பேலன் குறைந்து சுகம் போதாமல் வயோதிபமுள்ளவராய்ப் போனதினால்,வேலைமுயற்சிகள் அனைத்தையும் விட்டு நீங்கினபொழுது, இலங்கை அரசாட்சியாரால் அவருக்குப் பெரியபென்சன் சம்பளங் கொடுக்கப்பட்டு வந்தது.

தாவீதையர் நல்லமுயற்சியுஞ் சுறுசுறுப்பும் சாந்தமுமானநடையுள்ளவராய் இருந்ததினால் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பற்பல உத்தியோகஸ்தர்களும் யோக்கியமானவர்களும் அவரைக் கனம்பண்ணி மரியாதை செலுத்திவந்ததுமன்றி அவரூரவர்கள்தானும் அவருக்கு ஆசாரமான இரக்க உருக்கத்தைக் காட்டவும் வெகுகாலமளவுக்கு அவரைக் கரிசனையான நன்றிபற்றுடனே நினைக்கவுங் கூடியதாயிற்று. அவர் நடத்திவந்த தேவபணிவிடைகளை அவரைச்சேர்ந்த சபையார் மேத்தக் கவனமாய்ப் பேணிவந்தார்கள். ஆனாலும், அவருடைய சாதுரியமான பேச்சுக்கள் ஒவ்வொன்றும் மனதில் உறுத்தத்தக்கவைகளாகவும் உவமைக்கருத்துக்கள் அடக்கியவைகளாகவும் இருந்ததினால் அவைகள் இத்தேசத்தவர்களுக்குத் தகுந்தவைகளாயிருந்தன.

[Success of Missions.]

### மிசியோன் விருத்தி.

௲அ௱ ம். ஆண்டின் ஆரம்பத்திலே அஞ்ஞான இருள் மூடிய சில இடங்களில்மாத்திரம்போன சிறிது கிறிஸ்தமார்க்கக் குருமார் ஒரு சின்ன வெளிச்சத்திற்கு ஒப்பாய்ப் பிரகாசித்தார்கள். அக்காலத்தில் அவர்களுக்கிருந்த பராபரிப்புக் குறைவுபட்டிருந்ததுமன்றிச் சுவிசேஷ மார்க்கமும் அஞ்ஞானிகளுக்குள் உரங்கொள்ளாமலுந் தங்கள் சபையார்களுக்குள்ளே நல்விருப்பத்தையாவது நன்முயற்சியையாவது காணாதவர்களாயும் இருந்தார்கள். இக்காலத்திலே மிசியோனரிமார்களின் ஒழுங்குகளையும் முறைகளையும்பற்றி நாங்கள் காண்கிற பிரகாரமாய் அப்போஸ்தலர்கள் இருந்த காலத்திலாவது வேறெந்தக் காலங்களிலாவது இருந்ததென்றெண்ணுவதற்கு இடமில்லை. பூமியின் சில பகுதிகளில் இன்னும் போய்ச் சுவிசேஷத்தைப் போதிப்பதற்கிடங்கிடையாமலிருக்கிறபடியால் அவர்கள் சகல இடங்களிலும் இருந்ததாக நினைப்பதுங் கூடாமை. கிறிஸ்தப் பிரயாணிகள், ௨௲. மயில் தூரமான ஆபிரிக்காக் கண்டத்திற் சகல பிரதான திசைகளிலும், மேற்கு ஆசியாவின் ஒவ்வொரு பிரதானதிக்குகளிலும், இந்தியாவின் முழக்கரையோரங்களிலும், கங்கைக் கரையிலும், ஈந்தியதேசம்முழுவதிலும், இலங்கைத்தீவிலும், அசமம், சீயம் முதலியதேசங்களிலும், சீனதேசத்தின் ஐந்துபிரதான இராச்சியங்களிலும்போனால், இந்தப் போதகர்கள் அங்கங்கேயிருக்கக் காண்பார்கள். பாசிபிக்கென்ற பெரியசமுத்திரத்திலே கப்பலோடிப்போகையில் கிறிஸ்துவின் சிலுவையைப் பிரசங்கிக்குங் குருமார் துட்டமனிதர்களின் கைகளிலிருந்து தங்களைக் காக்கக்கூடுமென்ற நம்பிக்கையினாலே அதைச் சேர்ந்த எந்தத் தீவுகளுக்கிடையிலும் நிற்கும்படி துணிந்து கப்பலுக்கு நங்கூரம் போடுகிறார்கள். அமேரிக்காவின் மேற்குப் பகுதியின் வனாந்தரத்தின் பெரிய ஆறுகளுக்கு நெடுகஇருக்கும் கன்மலைகளுக்கப்பால் துட்ட மனிதர்களின் யுத்தத் தொனியைக் கேட்பேனென்றதாக எண்ணிப் பயப்பட வேதுவாயிருக்கும் பிரயாணிகள் அச்சமயத்திலே சீயோனின் பாட்டுக்களைக் கேட்கையில் அவர்கள் இருதயம் எவ்வளவு மகிழ்ச்சிகொள்ளும்.

உலகமெங்குஞ் சுவிசேஷவெளிச்சத்தினால் யாவரும் மனந்திரும்புவார்களென்றதற்கு இவைகளெல்லாம் ஒரு தொடக்கமாகவே இருக்கின்றது. பின்னை அந்தத் தொடக்கம் எவ்வளவு பெரியதாயும் விஸ்தாரமுள்ளதாயுமிருக்கிறதென்பதை நாம் கவனிக்கவேண்டும். அது உலகத்தில் எத்தனை இடங்களில் எவ்வளவு விஸ்தாரமாய்த் தொடங்கியிருக்கின்றது. பூமியின் மத்திம உட்டண தேசப்பகுதிகளில் ஒவ்வொரு பாஷைக்காரருடனும், ஒவ்வொரு மார்க்கத்தவர்களுடனும், முன்னே சுவிசேஷம் அறிவிக்கப்படாதிருந்த ஒவ்வொரு பகுதிகளிலும் நின்று கிறிஸ்துவின் தானாதிபதிகள் ஆனந்த சந்தோஷத்துடனே சுவிசேஷம் பிரசங்கிப்பதைக் காண்பது எவ்வளவு சந்தோஷம்.

---

சிலநாளுக்குமுன் கன்னியாகுமரி கோவிலுக்கு வடக்கே அலைவாய்க்கரை கோட்டைவாயிலுக்குச் சமீபமாய் உரோமானித்தானொருவனை அடக்கஞ்செய்தவிடத்தில் குருசுநாட்டி அதில் அந்த ஏழை மனிதனுடைய இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறதாகவும், பின்னும் அனேக புதுமைகள் நடக்கிறதாகவும் சிலர், பேருண்டாக்கினார்கள். அந்தப் புளியை நம்பி உரோமானித்தரான வெகுபேர் முக்காதவழிக்கு அப்புறத்திலிருந்தும்வந்து காணிக்கைகள் போட்டுக் கூட்டங்கூட்டமாக இராத்தங்கி அந்தக் குருசில் எண்ணெ[illegible]ர்த்து விளக்குக்கொழுத்திக் கும்பிட்டு வந்தா[illegible] அதில்விழுந்த காணிக்கைகளை அவர்களுடைய குருவுக்குச் செலுத்தாததினால் போன மார்கழிமாதம், குரு கோபமடைந்து குதிரைச்சவாரி செய்துகொண்டுவந்து அந்தக் குருசை மண்வெட்டியினால் வெட்டித் தோண்டிப்பிடுங்கிக்கொண்டு போய்விட்டார். அதைப் பார்த்துக்கொண்டு நின்றவர்கள் சுவாமி, மகா புதுமை நடக்கிற இந்த அட்சயசிஷ்ட குருசை இப்படிச்செய்யலாமா என்றதற்கு, குருசில் ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டார். இதுவரையும் அந்தக் குருசடி பாழாய்க் கிடக்கின்றது. முன்தொழுதவர்கள் வெட்கிப்போனார்கள். அது ஒழிந்ததுபோலப் பூமியிலுள்ள சகல குடிகளும் பேயாராதனையைவிட்டுச் சுவிசேஷப்போதனைப்படி குருசில் மரித்த யேசுவைமாத்திரம் பாப்புமுதலான குருமாருஞ் சகல உரோமானித்தாரும்இரட்ச[illegible]ாகவிசுவாசித்துத்தொழுதுகொள்ளவும் தேவன் கிருபை செய்வாராக.

இப்படிக்கு, தேவதாசன்றீட்டர், சேமிற்றவுன்.

---

புகைக்கப்பல்.—பிறகிட்ட ஆவணி மாதத்தில், வோல்றிக் என்னும் பேரையுள்ள ஒரு அமேரிக்கன் கப்பல், ஏறக்குறைய மூவாயிரங்கட்டைதூரமாயிருக்கின்ற இங்கிலாந்தில் லிவ்வப்பூலென்னும் பட்டினத்திலிருந்து அமேரிக்காவில் நியூயோர்க்குப் பட்டினத்துக்கு ஒன்பது நாளைக்குள்ளே ஓடிப்போயிற்று. இதற்குமுன் இவ்வளவு சுதியமாயோடு ஒரு கப்பல் ஓடிப்போனதாய்க்காணவில்லை. ஆனாலும், பிறகிட்ட ௪௪ ம். ஆண்டில் கிப்பேனியா என்ற இங்கிலீசுப் புகைக்கப்பல் பன்னிரண்டு நாளைக்குள்ளே போனபொழுது, அமேரிக்காவிற் புதினப்பத்திரிகைகளிலெங்கும் இதே நெடும் பயணமென்று எழுதியறிவித்தார்கள். அதன் பிற்பாடு பெரும்பாலும் பத்துநாளைக்குள்ளே வரத்தக்கவையாய்ப் புகைக்கப்பல்களெல்லாம் திருத்தப்பட்டிருக்கின்றன. இன்னுஞ் சிறிது வருடத்திற்குள்ளே இங்கிலாந்தும் அமேரிக்காவும் ஒன்றுக்கொன்று ஏழுநாள்தூரப் பயணமாக்கிக்கொள்ளப்படுமென்று நாங்கள் சந்தேகமில்லாமற் காத்திருக்கிறதற்கு இடமாயிருக்கின்றது.

day. However, I feel that within me that promises a release before long, from all this insufferable misery. But what will become of my poor children?" Johnny sat down upon a bench and burst into tears. His visitor, as we have said, was a kind hearted man. "Suppose I should get some discreet person to talk with your wife," said he. Johnny raised his eyes and his hands, at the same moment. "Talk with her!" he replied, "you may as well talk with a whirlwind—the abuse which she poured on me, this morning, for proposing to bring our good minister to talk with her, would have made your hair stand on end. No, I am heart-broken, and undone, for this world. I have no hope save in a better, through the mercies of God. The visitor took the poor man by the hand, and silently departed. He uttered not a word: he was satisfied that nothing could be said to abate the domestic misery of poor Johnny Hodges in the present world; and there was something in his last words, and in the tone in which they were uttered, which assured the visitor, that Johnny's unshaken confidence in the promises of God would not be disappointed in another.

How entirely inadequate is the most finished delineation, to set forth, in true relief, the actual sum total of such misery as this! To the interrogatory of poor Johnny Hodges, "*Can nothing be* DONE *to put an end to the evils of intemperance?*" what answer, here and hereafter, do those individuals propose to offer, who withhold their names from the temperance pledge?

The summer had passed, and the harvest was over. About four months after the last interview, I heard, for the first time, the story of poor Johnny Hodges. Taking a particular direction to his house and shop, I put on my surtout, and set forth, upon a clear, cold November morning, to pay the poor fellow a visit. It was not three miles from the city to his dwelling. By the special direction, which I had received, I readily identified the shop. The doors were closed,—for it was a sharp, frosty morning. I wished to see the poor fellow at his forge, before I disclosed the object of my visit. I opened the door. He was not there. The bellows were still. The last spark had gone out in the forge. The hammer and tongs were thrown together. Johnny's apron was lying carelessly upon the bench. And the iron, upon which he had been working, lay cold upon the anvil. I turned towards the little dwelling. That also had been abandoned. A short conversation with an elderly man, who proved to be a neighbor, soon put my doubts and uncertainties at rest. The conclusion of this painful little history may be told, in a very few words. The wife, who, it appears, notwithstanding her gross intemperance, retained no inconsiderable portion of personal comeliness, when not absolutely drunk; had ran off in company with a common soldier, abandoning her husband and children about three months before. Five days only before my visit, poor Johnny Hodges, having died of a broken heart, was committed to that peaceful grave, where the wicked cease from troubling, and where the weary are at rest. On the same day, four little children were received, after the funeral, as inmates of the poor-house.

"I have known them well, all their life-long," said the old man, from whom I obtained the information. "The first four or five years of their married life, there was not a likelier, nor a thriftier, nor a happier couple, in the village. Hodges was at his forge early and late; and his wife was a pattern of neatness and industry. But the poor woman was just as much poisoned with rum, as ever a man was with arsenic. It changed her nature, until, at last, it rendered her a perfect nuisance. Every body speaks a kind word of poor Hodges, and every body says that his wife killed him, and brought his children to the poor-house. This is a terrible curse to be sure. Pray, sir, '*Can't something be done to put an end to the evils of intemperance?*'" Such, thought I, was the inquiry of poor Johnny Hodges. How long can the intelligent legislatures of our country conscientiously permit this inquiry to pass, without a satisfactory reply? How many more wives shall be made the enemies of their own household; how many more children shall be made orphans; how many more temperate men shall be converted into drunken paupers; before the power of the law shall be exerted, to stay the plague? In the present condition of the world, while the legislature throws its fostering arm around this cruel occupation, how many there are, who will have abundant cause to exclaim, like poor Johnny Hodges, from the bottom of their souls,—WHAT A CURSE! How many shall take as fair a departure for the voyage of life, and make shipwreck of all their earthly hopes, in a similar manner! How many hearts, not guilty of presumptuous sins, but grateful for Heaven's blessings in some humble sphere, shall be turned, by such misery as this, into broken cisterns, which can hold no earthly joy! How many husbands of drunken wives; how many wives of drunken husbands; how many miserable children, flying in terror from the walking corpses of inebriated parents, shall cry aloud, like poor Johnny Hodges, in the language of despair, WHAT A CURSE!

CANADA.—The Montreal Witness says that a number of amputations of frozen feet have lately taken place in the Montreal General Hospital, and that nearly every case can be traced to strong drink.

A chaste eye exiles licentious looks.

## REMINISCENCES OF A RECENT VISIT TO AMERICA, No. 12.

The Sabbath after my arrival at White's Hill in Stroud, I attended chapel with father Knight's family at Ruscum, where is a small church and congregation under the pastoral care of the Rev. E. Jones, a Welsh minister. It was sacramental Sabbath, and I was invited to take part in the services of the occasion. Many novel impressions were made on my mind, on joining in worship with a Christian congregation after so long a residence in heathen lands. One of the deepest of these impressions was made by the fact that *but a fractional portion* of the congregation were found at the table of the Lord to show forth, in the appointed way, his death till he come. I could not but inquire with interest and surprise, "Who were they (the great body of the congregation) who have just now retired from the sanctuary—leaving but a small company to join in the solemnities before us. Are they not Christians?" &c. I had quite lost sight of this uncomely feature of Christendom, which I found to be essentially the same among all denominations of Christians—awakening with concern the inquiry, "Lord are there few that be saved?" It is easy to perceive, how it happens that many who are willing to be found eating and drinking at the table of the Lord on earth, may be of the number to whom he will say in the judgment "I never knew you." But how shall we account for it that in the very heights of Protestant Christendom, where it is well understood that *obediance* to the *commands* of Christ is the appropriate test of discipleship,—large majorities even of church-going people, live in the entire neglect of the positive command to the *disciples*, "Do this in remembrance of me."

Connected with this church and congregation is a missionary prayer meeting of long standing, held at an early hour on Sabbath morning. In all this, I saw another illustration of the good effects of having "a share in the concern." Not only the late Rev. Joseph Knight for many years a missionary at Nellore but also the late Rev. T. Browning and wife, missionaries at Kandy, and several other missionaries now in the field, were from the neighborhood of White's Hill. The reflex influence of missions for good, upon the families, churches and communities from which missionaries are sent forth to pagan lands, was a fruitful and pleasing theme for thought, during my whole visit in Christendom beginning at White's Hill.

I had long been acquainted by report, and in a slight degree by correspondence, with the character and successful labors of the Rev. Dr. J. Williams, who for many years was the Vicar of Stroud parish, and by whose influence Messrs. Knight, Browning, Morse and others were brought forward as missionaries, and sent forth under the auspices of the Church Missionary Society. At this time Dr. Williams, having been removed from his curacy at Stroud, was Rector of Woodchester, a parish two miles distant, where I had the pleasure and profit of making a personal acquaintance with him. In Woodchester is found a curiosity of some celebrity in that region, in the form of a "Roman pavement,"—a spacious subterranean room, containing a variety of sculpture, inscriptions, &c. This room is occasionally opened to the public, and ticket money required of every visitor—the money thus received being appropriated to some object of charity previously specified. The room was closed up at the time I was there; but a splendid volume, folio, with numerous descriptive plates, was open for inspection. But as it was my object to become acquainted with the present state of modern *Christendom*, rather than with the curiosities of ancient *heathendom*, I was quite willing hastily to pass over the "pavement," that I might make the most of my time in the rector's parlor. D. POOR.

